**<u>சார்பு நீதிமன்றம், அரூர், தருமபுரி மாவட்டம்</u>**

**<u>OS.No.176/2017</u>**

<u>வாதி தரப்பு சாட்சி– 6</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாந்தி | கணவர் பெயர் | : | சசிதரன் |
| கிராமம் | : | மேட்டுப்பட்டி | வட்டம் | : | அரூர் |
| தொழில் | : | பத்திர எழுத்தர் | வயது | : | 58 |

Solemnly affirmed/sworn by **Bench Clerk GII,** in accordance with the provisions of Act of 1873, on this the 19th day of September 2025

PW–6

வாதி தரப்பு சாட்சியம் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.
தாவாவில் நான் 3ம் நபர் ஆவேன். எனது முதல் விசாரணையை விரிவாக துவக்கி சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை என் முதல் விசாரணையின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். அதில் இருக்கும் சங்கதிகள் சரியானவை. அதில் இருப்பது என்னுடைய கையொப்பம்தான்.
ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது அலுவலகத்திற்கு வந்து யார் உடன்படிக்கை பத்திரத்தை குறித்து என்ன கேட்டார்கள் என்றால் ராஜிவ்காந்தி, வேலு ஆகியோர் எனது அலுவலகத்திற்கு வந்து அக்ரிமெண்ட் போடவேண்டும் என்று சொன்னார்கள். எங்கள் அலுவலகத்தில் ஏதாவது விலைபேசினார்களா என்றால் எங்கள் அலுவலகத்தில் எதுவும் பேசவில்லை. எங்கள் அலுவலகத்தில் வைத்து பணம் ஏதும் கொடுத்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பத்திரம் எழுதுபவர்களும் சாட்சியாக கையெழுத்து போடுவது வழக்கம் என்றால் இல்லை. அந்த பத்திரத்தில் என்னுடைய பங்கு

என்ன என்றால் அந்த பத்திரத்தை தயார் செய்பவர் மட்டும். அந்த பத்திரத்தில் சாட்சியோ அல்லது பதிவு செய்யப்பட்டபோது சாட்சியாகவோ இல்லை. அந்த பத்திரத்தில் சாட்சி யார் என்றும், அந்த பத்திரம் பதிவுசெய்யப்பட்டபோது சாட்சி யார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

2. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3ம் பத்தி கடைசியில் வாதி ராஜிவ்காந்தி என்னிடம் கூறி அழைத்ததால் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் எப்போது அவ்வாறு என்னை அழைத்தார் என்றால் 3, 4 மாதத்திற்கு முன்பு சாட்சியம் அளிக்க வரவேண்டும் என்று அழைத்தார். இன்று ராஜிவ்காந்தி வந்துள்ளாரா என்றால் அது எனக்கு தெரியாது, ஆனால் போன் செய்து என்னை கோர்ட்டுக்கு வரசொல்லி சொன்னார். அது எந்த போன்நெம்பர் என்று சொல்லமுடியுமா என்றால் போன்நெம்பர் நினைவில்லை, ஆனால் 3 நாளுக்கு முன்பு போன்மூலம் இன்று கோர்ட்டுக்கு வரசொன்னார். ராஜிவ்காந்தியின் அப்பா பெயர் என்ன என்றால் அது எனக்கு தெரியவில்லை. ராஜிவ்காந்தி எங்கு குடியிருக்கிறார் என்றால் அவர் சென்னையில் குடியிருக்கிறார், முகவரி தெரியாது. சொத்து வியாபாரம்பேசி ஒப்பந்த பத்திரம் எழுதுவதாக இருந்தால் அந்த சொத்தின் 4 புற எல்லைகள் குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான், கண்டிப்பாக குறிப்பிடவேண்டும். கடன் பொறுப்புக்காகவும் ஒப்பந்த பத்திரம் எழுதி பதிவு செய்துகொள்கிறார்கள் என்று சொன்னால் சரிதான், அவ்வாறும் எழுதிகொள்கிறார்கள். அவ்வாறு கடன் பொறுப்புக்காக ஒரு ஒப்பந்த பத்திரம் எழுதும்போது ஒவ்வொரு சர்வே எண்ணிலும் ஒப்பந்த சொத்தின் 4 புற எல்லைகள், அளவுகள் குறிப்பிட்டு

எழுதுவது கிடையாது என்றால் சரியல்ல, அவைகள் எல்லாம் குறிப்பிட்டுதான் எழுதப்பட்டும், செக்குபந்தி இல்லை என்றாலும் அந்த சொத்து எதன் மத்தியில் அமைந்துள்ளது என்று எழுதப்படும்.

3. ஒரு ஆவணத்தை எழுதி பதிவு செய்யும்போது அதற்காக நான் எனது அலுவலகத்தில் அதற்கான பதிவேடுகள் ஏதாவது பராமரித்து வந்துள்ளேனா என்றால் பராமரித்து வந்துள்ளேன். இந்த ஒப்பந்த பத்திரத்திற்கு அவ்வாறு பதிவேட்டில் குறித்து எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதி வைத்திருப்பேன். அதனை இந்த நீதிமன்றத்தில் ஒப்படைக்கமுடியுமா என்றால் அது பழைய ஆவணமாக ஆகிவிட்டதால் அதனை நீதிமன்றத்தில் சமர்பிக்க இயலாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் 3ம் பக்கத்தில் சர்வே எண்.71/3 ல் புஞ்சை ஹெக்டேர் 0.41.0 அதற்கு புஞ்சை ஏக்கர் 1.01 என்று எழுதப்பட்டு அது முழுவதும் என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முழுசொத்தும்தான் ஒப்பந்த சொத்தா என்றால் ஆமாம். அதேபோல மற்ற 2 சர்வே எண்கள் 71/5, புஞ்சை ஹெக்டேர் 0.41.5 இதற்கு சரியான புஞ்சை ஏக்கர் 1.03, சர்வே எண். 78/1A புஞ்சை ஹெக்டேர் 10.4.5 இது பூராவும் இதற்கு சரியான ஏக்கர் 2.58 என்றும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 சர்வே எண்களான 71/3, 71/5, 78/1A ஆகிய மொத்த சொத்துக்களையும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை, 4 ஏக்கர் 62 சென்ட்டில் 3 ஏக்கர் மட்டும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி 3 சர்வே எண்களிலும் ஒப்பந்தம் போடாமல் நிறுத்திவைக்கப்பட்ட

சொத்தின் அளவு, எல்லை பற்றி அதில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. அந்த ஒப்பந்தத்தில் 4.62 ஏக்கர் நிலத்தில் ஏக்கர் 3 ஏக்கர் மட்டும் நிலம் என்று சொல்லப்படுவதற்கு 4 புற எல்லைகள் ஏதாவது சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை, அவர்களிடம் அது குறித்து கேட்டதற்கு 3 மாதம் தான் அக்ரிமெண்ட் போட்டுள்ளோம் அதற்குள் அளந்து செக்குபந்தி போட்டு கிரையம் செய்து கொள்வதாக சொன்னார்கள். எந்தப்பக்கம் அளந்து செக்குபந்தி போடுவதாக சொன்னார்கள் என்றால் அது பற்றி சொல்லவில்லை. ஒரு சொத்து ஒப்பந்தம போடும்போது தெளிவாக அதன் அளவையும், நான்குபுற எல்லையை குறிப்பிட்டு ஒப்பந்தம் போடுவது தான் வழக்கம் என்றால் சரிதான். கடன் பொறுப்புக்காக என்னிடம் காட்டப்படும் ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டதால் தான் ஒவ்வொரு புல எண்ணிலும் அளவு, மற்றும் நான்குபுற எல்லைகள் பற்றி குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, தரப்பினர்கள் விற்பதாகவும், வாங்குவதாகவும் என்னிடம் எழுதிக்கொண்டார்கள். நான் பத்திரத்தை வரைவு தயார் செய்தது மட்டும்தான் அதில் உள்ள சங்கதிகளை பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். இந்த பத்திரத்தை நான் தயார் செய்ததால் ராஜிவ்காந்தி கேட்டுக்கொண்டதற்காக உண்மைக்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.09.19 16:36:19 +0530